உங்களைப் போல 'கட்சி அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன்' எனச் சொல்லிவிட்டு அமித்ஷா வீட்டுக்குப் போனவர் அல்ல எங்கள் முதல்வர்!

'நிதி ஆயோக் கூட்டத்திற்குச் செல்கிறேன்' எனச் சொல்லிவிட்டுச் சென்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

பழனிசாமிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன அறிக்கை!

சென்னை, மே 27 -

உங்களைப் போலக் கட்சி அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன் எனச் சொல்லிவிட்டு, அமித்ஷா வீட்டுக்குப் போனவர் அல்ல எங்கள் முதல்வர் என்றும், நிதி அயோக் கூட்டத்திற்குச் செல்கிறேன் எனச் சொல்லிவட்டுச் சென்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்" அவர்கள் என்று பழனிச்சாமிக்கு கண்டனம் தெரிவித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை விடுத்துள்ளார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

எதிர்க் கட்சித் தலைவராகச் செயல்பட எத்தனையோ 'ஸ்கோப்' இருக்க, 'பயோஸ்கோப்' காட்டிக் கொண்டிருக்கிறார் 'சூனாபானா' எடப்பாடி பழனிசாமி!

நிதி ஆயோக் கூட்டத்தை வைத்து எதிர்க் கட்சித் தலைவர் செய்யும் சேஷ்டைகள் சினிமாவில் கூட கண்டிராத நகைச்சுவை காட்சிகள். அதனைத் தமிழ்நாடு அரசு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களும் ரசித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

நிதி ஆயோக் கூட்டத்தை வைத்து அதிகம் ஸ்கோர் செய்வது யார்? என எதிர்க்கட்சிகளுடன் போட்டா போட்டி நடக்கிறது. ஒரே மாதிரியான நாக்பூர் ஸ்கிரிப்டை வைத்து விஜய்யும் பழனிசாமியும் மாறி மாறி நாக்கு வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரே மாதிரியான அறிக்கையைக் காப்பி பேஸ்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். பாஜகவுக்குத் தான் தமிழ்நாட்டின் எத்தனை கிளைக் கழகங்கள்?

எதற்கும் வருத்தப்படாத இந்த வாலிபர்களை(?) பார்க்கும்போது, "ஏய் அங்குட்டு போய் விளையாடு ங்கப்பா" என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. அதிலும் பழனிசாமியின் காமெடி கதறல்கள் காதுகளைக் குளிர வைக்கின்றன.

"நான்தான் அதிமுகவின் பொதுச் செயலாளர்" எனப் பொதுக்குழு, நீதி மன்றம், தேர்தல் ஆணையம், தெருமுனை என பழனிசாமி புலம்பியதை எல்லாம் கணக்கிட கால்குலேட்டரே திணறும்! நிரந்தர பொதுச் செயலாளர் என எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவுக்கும் போடப்பட்ட நிரந்தர நாற்காலியை நகட்டிக் கொண்டு போனவர் யார்? எம்.ஜி.ஆர், ஜெயலலிதா அமர்ந்த பொதுச் செயலாளர் இருக்கையை அபகரித்த அபகரிப்பாளர் அல்லவா பழனிசாமி.

மார்ச் 25ம் தேதி சட்டமன்ற கூட்டத் தொடரில் பங்கேற்காமல் கூட டெல்லிக்கு அவசரமாகச் செல்லும் அளவுக்கு எதிர்க் கட்சித் தலைவருக்கு என்ன வேலை இருந்தது? டெல்லியில் எதற்காக டீல் போட்டார்?

"இபிஎஸ் யாரைச் சந்திக்கப் போகிறார் என்ற செய்தி வந்திருக்கிறது. அப்படிச் சந்திக்கும் நேரத்தில் இருமொழிக் கொள்கை பற்றி இபிஎஸ் வலியுறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்" என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னார். பழனிசாமி செய்தாரா? இல்லையே!

"பிரத்தியேகமான நபரைப் பார்க்க வரவில்லை. டெல்லியில் திறக்கப் பட்டுள்ள எங்களது கட்சி அலுவலகத்தைப் பார்வையிடவே வந்துள்ளேன்" எனப் பொய் முலாம் பூசியவர்தானே பழனிசாமி.

பெருமாள் பிச்சையை மிஞ்சிய பழனிசாமி!

டெல்லியில் உள்ள அண்ணா தி.மு.க. அலுவலகத்துக்கு ஒழுங்காக வெள்ளை அடித்திருக்கிறார்களா? எனப் பார்க்கப் போனவர், ஏன்

மூன்று கார்களில் மாறி மாறிப் போனார்? 'சாமி' திரைப்படத்திற்கும் 'பழனிசாமி' கேரக்டருக்கும் சம்பந்தம் உண்டு என்றால் இந்தச் சமூகம் நம்ப வேண்டும். சாமி படத்தின் வில்லன் பெருமாள் பிச்சை கதாநாயகனிடம் இருந்து தப்பிக்க கிளைமேக்ஸில் கார்கள் மாறி மாறிப் போவார். அந்த பெருமாள் பிச்சையையே மிஞ்சி விட்டார் பழனிசாமி.

அன்றைக்கு டெல்லியில் அமித்ஷாவுடன் பழனிசாமி சந்திப்பு நடப்பதற்கு முன்பே, "2026ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமையும்' என ஒன்றிய அமைச்சர் அமித் ஷா ட்வீட் போட்டாரே! பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பே கூட்டணிக்கான அதிகாரத்தை அமித்ஷாவிடம் தாரை வார்த்ததை தவழப்பாடியார் மறந்துவிட்டாரா?

அமித்ஷா சந்திப்பு பற்றி அடுத்த நாள் 26/3/25 அன்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது, "தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்பாகவே கூட்டணி பற்றிப் பேச எந்த அவசியமும் இல்லை" என சூனாபானாவாக முழங்கிவிட்டு, 11-4-25ம் தேதி அதிமுக - பாஜக கூட்டணி அறிவிக்கப்பட்டது. அப்போது அமித்ஷா பக்கத்தில் அமர்ந்திருந்த சூராதி சூரர் யார்? இதுதான் பழனிசாமி சொன்ன ஓராண்டுக் காலமா? பச்சைப் பொய் பழனிசாமி என்பதை மணிக்கொரு தடவை நிரூபித்துக் கொண்டே இருந்தார்!

முதலில் 'அ.தி.மு.க. அலுவலகம் பார்க்கப் போனேன்'. பிறகு 'மக்கள் பிரச்னைகளுக்காக அமித்ஷாவை சந்தித்தேன்' என கலர் கலராக கம்பி மத்தாப்புகளை நீங்கள் கொளுத்திய போது அன்றைக்கு அதிமுக வட்டாரம் அறிவிக்கப்படாத தீபாவளியாக மாறியது. இப்படி உங்களின் ரீல்கள் அந்து போனதை மறைக்க, பொய்க் குப்பைகளை அள்ளி வீசி, தமிழ்நாட்டை அசுத்தம் செய்ய வேண்டாம்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கான நிதிப்பகிர்வு மற்றும் நியாயமான நிதி ஒதுக்கீடு பற்றி நேரடியாக வலியுறுத்தி இந்திய மக்கள் முன் எடுத்து வைக்க நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனால், அதைத் திரித்து தனது அவதூறு அரசியல் குப்பைகளை அள்ளி வீசி தமிழ்நாடு அரசு மீதும் முதலமைச்சர் மீதும் களங்கம் கற்பித்துவிட லாம் என பழனிசாமி போட்ட கணக்கெல்லாம் தப்புக்கணக்கு ஆனதால், குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போலச் சமாளிக்க நீங்கள் போடும் வேடங்கள் உங்களை இன்னும் தோலுரிக்கின்றன.

அடிமைச் சேவகம் செய்வதில் முனைவர்!

'பில்ட்டிங் ஸ்ட்ராங்க் பேஸ் மட்டம் வீக்' என்பது போல எழுத்தில் சூரப்புலி என எழுதி விட்டு, செயலில் எலி போல நடந்து கொள்ளும் பழனிசாமியை கண்டு மக்கள் சிரிக்கின்றனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிகொடுத்து அடிமை சேவகம் செய்வதில் முனைவர் பட்டம் பெற்றிருக்கும் 'பாதந்தாங்கி' பழனிசாமிக்கு அடிப்படை அறிவுகூட இல்லை. தனது ஆட்சிக்காலத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்காகத்தான் அமலாக்கத் துறை சோதனை நடத்துகிறது என்ற உண்மையை மறைத்துவிட்டு, தமிழ்நாடு முதலமைச்சருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் புரளிகளை அள்ளிவிட்டு குறளி வித்தை காட்டிக் கொண்டிருக்கிறார்.

உச்ச நீதிமன்றம் அமலாக்கத்துறையின் அராஜகத்திற்குக் குட்டு வைத்து இடைக்காலத் தடை விதித்ததும் தனது டெல்லி ஓனர்களோடு சேர்ந்து, தான் ஓட்டிய பித்தலாட்டப் புரளி படம் 'Flop' ஆன விரக்தியில் இப்போது வாய்க்கு வந்ததை உளறித் திரிகிறார். தனது ஆட்சிக்காலத்தில் பதியப்பட்ட 40க்கும் மேற்பட்ட வழக்குகளுக்காகத்தான் அமலாக்கத்துறை சோதனை நடத்துகிறது என்கிற வெட்கமே இல்லாமல் தி.மு.க.வை குற்றம் சாட்ட நா கூசவில்லையா?

டெல்லி டீலிங்!

தனது உறவினர்களுடைய வீட்டில் நடந்த ரெய்டுகளுக்கு பயந்துதான் பாஜகவின் பண்ணையடி மையாக பழனிசாமி மாறினார். அதற்காகத்தான் அ.தி.மு.க.வை பா.ஜ.க. கூட்டணியில் அடமானம் வைத்தார். தமிழ்நாட்டில் உள்ள அரசியல் அறியாத பிள்ளைகளுக்கு இந்த உண்மைத் தெரியும், 23ம் புலிகேசியாக வாழும் தொடைநடுங்கி பழனிசாமி, "ரெய்டைப் பார்த்து எனக்குப் பயமா?" என வீர வசனம் பேசுவதுதான் இந்த ஆண்டின் மிகச் சிறந்த நகைச்சுவையாகும்.

தனது உறவினரின் ஊழலுக்குச் சப்பைக் கட்டுக் கட்டியிருக்கிறார் பழனிசாமி, 650 கோடிக்கு மேல் வரி ஏய்ப்பு செய்திருக்கிறார் எனும் ஊழல் குற்றச் சாட்டை "Discrepancies" என்கிறாரே பழனிசாமி ஊழலை "Discrepancies" என மாற்றுவதற்குத்தான் டெல்லியில் பதுங்கிப் பதுங்கி அமித்ஷாவை சந்திக்கச் சென்றாரா? பூனைக்குட்டி வெளிய வந்துவிட்டது என்பது போல அதிமுக வை அடகு வைத்ததற்கான டெல்லி டீலிங்கை வெளிப்படுத்தியிருக்கிறார் பழனிசாமி.

'நான் தான் சொன்னேனே... மத்தியில் நடப்பது காங்கிரஸ் ஆட்சி அல்ல உங்கள் ஆட்சியின் ஊழலுக்கான தண்டனையிலிருந்து யாரும் உங்களைக் காப்பாற்ற முடியாது என்று!' என சொல்லியிருக்கிறார் பழனிசாமி. அதாவது மோடி அரசுக்கு சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸின் சுவேந்து அதிகாரி, அஸ்ஸாம் காங்கிரஸின் ஹிமந்த பிஸ்வா, மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் நாராயண் ராணே, சிவசேனாவைச் சேர்ந்த பாவனா கவாலி, சிவசேனா எம்.எல்.ஏ. பிரதாப் சர்நாயக் போன்றவர்கள் மீதான அமலாக்கத் துறை வழக்குகளை எல்லாம் பா.ஜ.க. வாசிங் மிஷின் எப்படி சுத்தப்படுத்தியது. அந்த வாசிங் மிஷினில் விழுந்தவர் தானே பழனிசாமி அன் கோ. அதன் மூலம் தன் உறவினர்கள் மீதான வழக்குகளை ஒன்றுமில்லாமல் செய்ய அதிமுக என்ற ஆலமரத்தையே கோடாரியாகப் பயன்படுத்தினார்.

'பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தால்தான் தோற்றோம்' என்று நிர்வாகிகள் அலறித் துடித்த போதும் கூட அவர்களது கருத்துக்களை மதிக்காமல் பாஜகவுடன் கூட்டணி வைத்தது தன் உறவினர்களை காப்பாற்றத்தானே! தவழப்பாடியாரின் சட்டை கிழிந்தாலும், முன்னால் மேக்கப் கலையாமல் 'ஒய்யால என்ன மாதிரி கூவுறான்' என்பது போல பழனிசாமியின் கண்ணீர் நன்றாகப் புரிகிறது. தன்னுடைய மகன் மிதுனும் தன் உறவினர்களும் தப்பிக்கக் கட்சியைப் பலிபீடத்திற்குக் கொண்டு வந்த புண்ணியவான் தான் பழனிசாமி. அதிமுகவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்!

நிதி ஆயோக் கூட்டத்திற்குச் செல்கிறேன் எனச் சொல்லிவிட்டுச் சென்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். உங்களைப் போலக் கட்சி அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன் எனச் சொல்லிவிட்டு அமித்ஷா வீட்டுக்குப் போனவர் அல்ல எங்கள் முதல்வர்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி

நல உதவிகளுடன் வருடம் முழுவதும் கலைஞர் பிறந்த நாள் விழா!

பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, மே 27 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம் செம்மொழி நாளையொட்டி, மக்களுக்குத் தேவையான நல உதவிகளுடன் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டங்கள் நடத்திடுவீர் என்று திருவண்ணாமலை மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தமிழே உயிராக தமிழினமே உணர்வாக, தமிழர்நலனும் தமிழ்நாட்டு வளர்ச்சியுமே வாழ்நாள் செயல்திட்டமாக கொண்ட ஓய்வில்லா சூரியன்.

தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர். ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு கால பங்களிப்பாளர். அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து, தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர். களம் கண்ட 13 தேர்தல்களில் வெற்றி கண்ட சாதனையாளர். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்லமைச்சராக பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர்.

இந்திய ஜனநாயக காவலராக திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர். இலக்கியம், கவிதை, இதழியல், நாடகம் மற்றும் திரைப்படம் என தொட்டத் துறைகளை அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முக திறன் கொண்ட படைப்பாளர். திருக் குவளையில் பிறந்து திருவாரூ ரில் வளர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை முன்னிட்டு

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளை கழக நிர்வாகிகளும், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகளும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை, மரம் நடுதல், இரத்த தானம் செய்தல், நீர் நிலைகளை செப்பனிடுதல், ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், கழக கொடியேற்றுதல், இனிப்பு வழங்குதல் மற்றும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் நல உதவிகளுடன், கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டங்களை நடத்துதல் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை, ஆண்டு முழுவதும் எழுச்சியாக கொண்டாடிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் - மரம் விழுந்து கேரள மாநில

சுற்றுலாப் பயணி செல்வன் ஆதிதேவ் உயிரிழப்பு!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அஞ்சலி!

நீலகிரி, மே 27-

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் பலத்த காற்றின் காரணமாக மரம் விழுந்து கேரளா மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுலா பயணி செல்வன் ஆதிதேவ் என்பவர் எதிர்பாரா விதமாக உயிரிழந்ததை தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உயிரிழந்த சுற்றுலாப் பயணியின் உடலுக்கு மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினார்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தென் மேற்கு பருவமழையை முன்னிட்டு, பல்வேறு இடங்களில் கனமழை பெய்தும் மற்றும் பலத்த காற்று வீசி வருகிறது. இதனை முன்னிட்டு, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வாக இருக்க வேண்டும் என்று பல்வேறு தகவல்களைதொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இருந்தபோதும், இன்று கனமழை மற்றும் பலத்த காற்றின் காரணமாக உதகை வட்டம், சோலூர் வட்டம், கிளன்மார்கன் 8வது மைல் பகுதியில் மரம் விழுந்ததில், கேரளா மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுலா பயணி செல்வன் ஆதிதேவ் என்பவர் எதிர்பாராதவிதமாக உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து, உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள உயிரிழந்த சுற்றுலாப் பயணியின் உடலுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (25.05.2025) மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி கமலா திரையரங்கம் அருகில் ரயில் நிலையம் மற்றும் அக்கையா சாலையில் திருத்தணி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.23 லட்சம் மதிப்பீட்டில் தாய்மார்கள் பாலூட்டு அறை மற்றும் குளிர்சாதன அதி நவீன வசதியுடன் பேருந்து நிழற்குடை அமைக்கும் பணி துவக்க விழா நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் அடிக்கல் நட்டு பணிகளை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியம், நகர திமுக செயலாளர் வி.வினோத்குமார், நகரமன்ற உறுப்பினர்கள் ஷ்யாம் சுந்தர், அசோக்குமார், ஜி.எஸ். கணேசன், குமுதா , பிரசாத், பிரவீன் குமார், சித்திக் அலி, குமரன், சீனி வாசன், ரஹீம்.கே.தேவேந்திரன்,கே. பார்த்தசாரதி, உள்பட பலர்கலந்து கொண்டனர்.

அரசினர் தொழிற் பயிற்சியில் சேர மகளிர் விண்ணப்பிக்கலாம்!

10, 12-ஆம் வகுப்பு படித்தவர்கள் சேரலாம்!

சென்னை, மே 27-

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்) கிண்டியில், 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான சேர்க்கையானது 19.5.2024 முதல் துவங்கியுள்ளது. எனவே 10-ஆம் வகுப்பு தேறியவர்கள் / தோல்வியுற்றவர்கள் / இடைநின்றவர்கள் மற்றும் 12-ஆம் வகுப்பு தேறியவர்கள் / தோல்வியுற்றவர்கள் ஓர் ஆண்டு / இரண்டு ஆண்டு தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

பயிற்சியை முடித்தவுடன் 100 சதவீத வேலைவாய்ப்பு. பெண்களுக்கு வயது உச்சவரம்பு இல்லை.

பயிற்சியின் போது அரசால் வழங்கப்படும் சலுகைகள் விலையில்லா மிதிவண்டி, விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா சீருடை - 2 செட் தையல் கூலியுடன், விலையில்லா காலணி, இலவச பேருந்து மற்றும் இரயில் பயணச் சலுகை, மாதாந்திர உதவித் தொகை ரூ.750/.

தகுதியுள்ள மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் உதவித்தொகை ரூ.1000/-. இலவச அடையாள அட்டை ஆகியவை அரசால் வழங்கப்படுகிறது.

எனவே இந்த அறிய வாய்ப்பை பயன்படுத்தி பயிற்சியில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 13.06.25.

விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி: www.skilltraining.gov.in

இணையத்தில் பதிவு செய்ய வசதி இல்லாத மாணவிகள் நேரடியாக ஐ.டி.ஐ.க்கு வந்து விண்ணப்பிக்கலாம் என்று அரசினர் தொழிற்பயிற்சி (மகளிர்) நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ .தலைமையில்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை

காஞ்சிபுரம், மே 27 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (28-05-2025 புதன்கிழமை) காலை 11.00 மணி அச்சிறுபாக்கம் எஸ்.எம்.ஜெ. மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி ஆலோசனை வழங்கி பேசுகிறார். அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு பெருந்தலைவர் கே.கண்ணன் வரவேற்றுப் பேசுகிறார்.

மதுராந்தகம் நகரச் செயலாளர் கே.குமார், அச்சிறுபாங்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.தம்பு, அச்சிறுபாங்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி.கோகுலக் கண்ணன், மதுராந்தகம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எச். சத்தியசாய், மதுராந்தகம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்.சிவக்குமார், அச்சிறுப்பாக்கம் பேரூர் செயலாளர் வி.டி.ஆர். வி.எழிலரசன் , கருங்குழி பேரூர் செயலாளர் ஆ.சுந்தர மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கழகத்திருனருக்கு தேர்தல் பணி மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட துணை செயலாளர் க.செல்வம், தொகுதி மேலிட பார்வையாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.நாராயணன் , எஸ். உசேன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.பிரேம்சந்த், பேரூராட்சித் தலைவர் நந்தினி கரிகாலன், கருங்குழி பேரூராட்சித் தலைவர் கோ.தசரதன் உள்ளிட்ட மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உட்பட்ட கழக நிர்வாகிகள், மாநில மாவட்ட கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம்.ஜியாவுதீன். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.எஸ்.யுவராஜ், அ. ஆண்டோ சிரில்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

லண்டனில், ஈஸ்ட் ஹாமில் உள்ள டிரினிட்டி சென்டர் வளாகத்தில், பிரிட்டன் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துக் கொண்டு டாக்டர் கலைஞரின் சிறப்பு மலரை வெளியிட்டு தமிழ் மாணவ, மாணவியர்களுக்கு கலைஞரின் சாதனைகள் குறித்த கட்டுரை போட்டி, பேச்சு போட்டி மற்றும் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார் இதில் ஐக்கிய இராஜ்ஜியம் நாட்டின் தி.மு.க.அயலக அணி அமைப்பாளர் செந்தில், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சோ. விஜய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.